1972 மார்ச் 3]

சீரணிப் படையினருக்குத் தேவையான செலவினங்கள் தரக் கூடியவர்களுக்கு வீடுகளை அவர்கள் கட்டித் தரக்கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அவ்வித உத்தேசம் எதுவும் இல்லை. கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசிலனை செய்யும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே சீரணித் தொண்டர்களால் பல பணிகள் சிறப்பாக நிறைவேற்றப் படுகின்றன, அதற்காக சீரணித் தொண்டர்களுக்கு தமிழக அரசு சிறப்புப் பரிசு அளிக்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்பொழுது அவ்விதத் திட்டம் எதுவும் இல்லை.

Drought in Nanguneri taluk

* 282 *Q.*—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that continued drought condition prevails in Nanguneri taluk, Tirunelveli district; and

(*b*) if so the steps taken by the Government to prevent the drought?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை. திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் வறட்சி நிலைமை இப்பொழுது நிலவவில்லை.

(இ) நாங்குநேரி வட்டத்தில் தற்போதுள்ள குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 2,65,720 ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

Forest lands

* 293 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether forest lands have been assigned to the agriculturists as proposed by the Government; and

(*b*) if so, the details of the same?